பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 20 புதன்கிழமை 06.09.2023 கதிர் 299

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணையே வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியைக் கண்டறிய சர்வதேசவிசாரணைஅவசியம்.அதனை முன்னெடுப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு முதுகெலும்பு உள்ளதாவென எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில்நேற்றையதினம் விசேடகூற்றுஒன்றைமுன்வைத்துஉரையாற்றியஅவர்இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக நான் போட்டியிட்டிருந்தேன். பேராயர் கர்தினால் கோட்டாபயராஜபக்ஷவுக்குவாக்களிக்குமாறு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூயிருந்தார்.

இந்த நாட்டு மக்களுக்கு, நாட்டின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் அப்போது பெரும் பிரச்சினைகள் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இங்கிலாந்தின் சனல்-4 தொலைக்காட்சி, இலங்கையின் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்தும் அது யாருக்காக யாரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் நேற்று முன்னோட்டத்திற்கே ஆடிப் போயிருக்கிறது இலங்கையின் அரசியல் களம். இத்தனைக்கும், பிள்ளையானின் பேச்சாளராக இருந்தவரான அசாத் மௌலானா அந்தக் காணொளியில் சொல்லக்கூடிய விடயங்கள் இப்போது புதிதாகச் சொல்லப்படுபவை அல்ல. அவற்றில் பலவிடங்களை அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கிறார். பல சர்வதேச அமைப்புக்களிடமும் இது தொடர்பில் அவர் நேரடியாகவே வாக்குமூலமும் வழங்கியுள்ளார். இப்போது அது சர்வதேச ஊடகம்ஒன்றின்கவனத்திற்குவந்திருக்கிறது என்பதுதான் முக்கியமான விடயம்.

சனல் -4 தொலைக்காட்சியின் முழுமையான ஆவணம் விரைவில் வெளிவரவுள்ளது. அதில்அவரதுவாக்குமூலம் தொடர்பில்என்னென்னவிடயங்கள் ☞ 2

## யாழ். கல்வி வலயத்தில் 98 மாணவருக்கு 3ஏ சித்தி

(ந.லோகதயாளன்.)

திங்கட்கிழமை வெளியான கல்விப் பொது தராதர உயர் தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில்யாழ்ப்பாணம்கல்விவலயத்தில் 98 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தர சித்தி பெற்றுள்ளனர்.

வலிகாமம் கல்வி வலயத்தில் 61 மாணவர்கள் 3 ஏ தர சித்தியும் 51 மாணவர்கள் 2 ஏ,பி சித்தியினையும் பெற்றுள்ளனர். வடமராட்சி கல்வி வலயத்தில் 47 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தர சித்தியெய்தியுள்ளனர்.

தென்மராட்சி வலயத்தில் 30 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தர சித்தியினைப் பெற்றுள்ளனர்.

இதேபோன்று தீவக வலயத்தில் ☞ 2

## ராஜபக்ஷிக்களுடன் பிள்ளையானையும் உடன் கைது செய்யவேண்டும் - கஜேந்திரன்

ராஜபக்ஷக்கள் மற்றும் பிள்ளையான்போன்றவர்கள் உடன் கைதுசெய்யப்பட வேண்டுமென தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்றஆயுர்வேத (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியஊடகமானசனல் 4 ஊடாக வெளியான தகவல் சாதாரணமான விடயமல்ல. அதன் சூத்திரதாரியாக கிழக்கு மாகாணத்தின்நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை காட்டிக்கொடுத்த வருமான பிள்ளையான் இருக்கின்றார்.

பிள்ளையான் இலங்கை இராணுவத்துடன்இணைந்து 2009 வரை தமிழர்கள் பலர் கொல்லப்படுவதற்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

இந்நிலையில், 2020 ராஜபக் ஷக்கள் மீண்டும் ஆட்சியைக்கைப்பற்றும் ☞ 2

## சனல்-4 காணொளி தொடர்பில் எந்த கலந்துரையாடலும் நடக்கவில்லை

### மனுஷவின் கருத்துக்கு அமைச்சர் பந்துல மறுப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் - 4 தயாரித்துள்ள காணொளி குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் எந்தக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பாகசனல்-4தொலைக் காட்சியால் வெளியிடப்பட்டுள்ள காணொளி சம்பந்தமாக அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதாஎன்பதுதொடர்பில் கேள்வி எழுப்பபட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார,இந்தவிவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டதாகவும், நாடாளுமன்றத்தெரிவுக்குழு ஒன்று அமைத்து இந்தப் பிரச்சினை தொடர்பில் விசாரிக்க இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால், அத்தகையகலந்துரையாடல் எதவும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை ☞ 2

## வாகன இறக்குமதிக் கட்டுப்பாடு இந்த ஆண்டிறுதியில் நீக்கப்படும்

தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிகள் மீதான சகல கட்டுப்பாடுகளையும் 2023ஆம் ஆண்டு இறுதியில் நீக்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக நிதி அமைச்சின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கோதுமைமா மற்றும் தரை ஓடுகளை இறக்குமதி செய்வதை நிர்வகிப்பதில் இத்தகைய கட்டுப்பாடுகள் ஏற்படுத்திய இரட்டைக் கொள்கைகளைக் கருத்தில்கொண்டு,அத்தகைய கட்டுப்பாடுகள் எவ்வளவு காலம் இருக்கும் என்று என குழு வினவியபோதே அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

நிதி பற்றிய குழு அதன் தலைவர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷடிசில்வாதலைமையில் நேற்று கூடியபோதே இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும்ஏற்றுமதி(கட்டுப்பாட்டு) சட்டத்தின்கீழ்வெளியிடப்பட்ட 2341 / 38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள்குழுவில்ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழானகட்டளைக்கும்கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையிலான அரச நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய, முதல் தடவையாகப் புலம்பெயர் கொடுப்பனவைக்கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடையபுலம்பெயர் கொடுப்பனவு 30,000 அமெரிக்க டொலரிலிருந்து ஆகக் கூடியது 50,000 அமெரிக்க டொலராக அல்லது அதற்கு சமமான தொகைக்குக்கு ☞ 2

## தேர்தல்களை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கவில்லையாம்

ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமல்ல எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றயைதினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், 'பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளமை' ☞ 2

## கடற்றொழிலில் முதலிட சீனர்கள் கடும் ஆர்வம்

சீன நாட்டு முதலீட்டாளர்கள் குழுவினர் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை சந்தித்து, தாம் கடற்றொழில் துறையில் முதலீடுகளைச்செய்வதற்கும், தமது படகுகளின் மூலம் பிடிக்கும் மீன்களை தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் விரும்புவதாகத்தெரிவித்தனர்.

தமக்கான அனுமதி தரப்பட்டால் இத்துறையில் பெரும் முதலீடுகளை செய்வதற்கு தாம் தயாராகவுள்ளதாக சீன முதலீட்டாளர்கள் தெரிவித்தனர்.

சீனர்கள் தமது திட்டவரைபை வழங்கினால் இவ் விடயம் தொடர்பில் ஆராய்வதாக கூறினார்.

இந்த இரு தரப்பு சந்திப்பில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

## சரத் வீரசேகர - கபீர் ஹாசிம் இடையே கருத்து மோதல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில்பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் கபீர் ஹாசிமுக்கும் இடையில் நேற்று நாடாளுமன்றத்தில்தர்க்கம்ஏற்பட்டது.

ஆயுர்வேத (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றிய சரத்வீரசேகர, சிங்களத்தில் ஒரு பழமொழி உள்ளதுபன்றிகள்பயிர்களை சேதப்படுத்தும்போது கோழிகளுக்குக்கொண்டாட்டமாம். அதுபோல வெளிநாட்டு சக்திகள்எமதுஇராணுவத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்ற பொழுது இராணுவத்தின் மீது களங்கத்தை ஏற்படுத்தக் காத்திருப்பவர்களுக்கு அது மகிழ்ச்சியான செய்தியாக மாறியிருக்கிறது.

சஹ்ரானின் காணொளியில் உயிர்ந்த ஞாயிறு தாக்குதலைநடத்துவதற்கான காரணத்தை மிகத்தெளிவாக அவர் கூறியிருக்கிறார் - என்றார்.

குறுக்கீடு செய்த ☞ 2

## ஏப்ரல் குண்டுத் தாக்குதலுக்கு முன்னரே மக்களாணை வெல்லப்பட்டுவிட்டதாம்

### ராஜபக்சக்களுக்கு ஆதரவாக மஹிந்தானந்த கருத்து

ஏப்ரல் குண்டுத் தாக்குதலுக்கு முன்னரே ராஜபக்ஷக்கள் மக்களாணையை வென்றுவிட்டார்கள். குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு மக்களாணையைப் பெற வேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு இல்லையென பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்றஆயுர்வேத (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு ☞ 2

## மின்சார சபை மறுசீரமைப்பு நிச்சயம் அடுத்த மாதம் அதற்கான சட்டவரைவு

மின்சாரசபையைநிச்சயம் மறுசீரமைக்கவேண்டும்.அது தொடர்பானசட்டமூலம்அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம், ஐக்கிய மக்கள்சக்தியின்பாராளுமன்ற உறுப்பினர் யூ.கே.சுமித் உடுகும்புர வாய்மூல விடைக்கான வினாக்களின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அப்பதிலில் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மின்சார உற்பத்தி மற்றும் விநியோக கட்டமைப்பில் பாதிப்பு ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. உக்ரைன்-ரஷ்யா போர், கொவிட் பெருந்தொற்று தாக்கம் ஆகியபூகோளகாரணிகளால் எரிபொருள்,நிலக்கரி ஆகிய மூலப்பொருட்களின் விலை சடுதியாக உயர்வடைந்தன.

வெளிநாட்டுக் கையிருப்புப் பற்றாக்குறையால் எரிபொருள் கொள்வனவு கேள்விக்குள்ளாக்கப்பட்டது. இதனால் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டது.

மறுபுறம்9வருடகாலமாக நடைமுறைக்கு சாத்தியமான வகையில்மின்சாரகட்டணம் திருத்தம் செய்யப்படாத காரணத்தால் தேசிய மட்டத்தில் மின்னுற்பத்தி மற்றும் விநியோகம் ஆகிய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைக்கப்பட்டபோது ☞ 8

## அசாத் மௌலான, பிள்ளையானுடன் சுரேஷ் சாலேயையும் விசாரியுங்கள்

### நாடாளுமன்றில் நளின் பண்டார வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சனல் -4 காணொளி வெளியிடப்பட்டுள்ள நிலையில், அசாத் மௌலானாவை நாட்டுக்கு அழைத்து வந்து விசாரணைக்குஉட்படுத்தவேண்டும் பிள்ளையானை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். சுரேஷ் சாலேயை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஆயுர்வேதம் (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருடனுக்கு முன்னதாக வாழைக்குலை வேலி தாண்டியதைப் போன்று தற்பொழுது சபையில் உள்ள கோட்டாபயவினுடைய ஆதரவாளர்கள் குழப்பம் அடைகின்றார்கள். சனல்-4 காணொளியில் உயிர்த்த ஞாயிறுதாக்குதல்தொடர்பான சூத்திரதாரிகள் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த விடயத்தை ☞ 8

## இனி இது .....

வெளிவரப்போகின்றன என்பது தெரியவில்லை ஆயினும்,அவரால்ஏற்கனவே சர்வதேச அமைப்புக்களிடம் வழங்கப்பட்டவாக்குமூலத்தில் பலபயங்கரமானவிடயங்கள் உள்ளடங்கியுள்ளன. குறிப்பாக பிள்ளையான் மூலம் ஆளும் தரப்பினர் நிறைவேற்றிக்கொண்ட பல நீதிக்குப் புறம்பான கொலைகள், சட்டவிரோதக் காரியங்கள்குறித்ததகவல்கள் அதில் அடங்கியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த பிள்ளையானை வெளியில் கொண்டு வருவதற்கு இடம்பெற்ற சதிகள், அரசியல்வாதிகள் சிலர அதற்கெடுத்த முயற்சிகள் என்று பல விடயங்களும்கூட அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அவையெல்லாம்கூட சனல் -4 காணொளியில் இடம்பெறுமா என்று தெரியவரவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அவரது வாக்குமூலங்கள் இடம்பெற்றிருக்கின்ன என்பது முன்னோட்டத்தைப் பார்க்கும்போது தெரிகிறது.

சனல் -4 தொலைக்காட்சி இதற்கு முன்னரும் இறுதிப் போர் தொடர்பில் இரு ஆவணப் படங்களை வெளியிட்டது. நீதிக்குப் புறம்பாக போர்க் கைதிகள் கொல்லப்பட்டமை, சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள், தளபதிகள் கொல்லப்பட்டமை தொடர்பானஉண்மைகள்பலவற்றையும் அரசின் போர்க் குற்றங்களையும் அவை வெளிப்படுத்தியிருந்தன. அவைவெளியானதருணங்களில் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டன. எனினும் சில காலங்களிலேயே அந்தப் பரபரப்பு அடங்கிப்போய்விட்டது. அந்தக்காணொலிகளால் தமிழர்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன என்று கேட்டால், எதுவும் இல்லை என்பதே பதில். ஒரு கால கட்டத்தில், தமிழர்களின் பிரச்சினையை சர்வதேச அரங்கின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தவிர அந்தக் காணொளிகளால் ஆற்றப்பட முடிந்த காரியம் பெரிதாக வேறொன்றும் இல்லை.

இப்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியாக இருக்கும் காணொளி ஏற்கனவே இலங்கையின் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. அதையொட்டிய விசாரணைகள் உள்நாட்டிலும் சர்வதேசமட்டத்திலும்நடத்தப்பட வேண்டும் என்கிற கோரிக்கைகள் வலுத்துள்ளன. எனினும், இது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ளது, இதுபோன்று நடப்பது வழக்கமானதுதான் என்று ஆளும் தரப்பு இந்த விடயத்தை ஏற்கனவே சுலபமாகக் கடந்துசென்றுவிட்டது. அது குறித்து ஆட்சியாளர்கள் பெரிதும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஐ.நா. அறிக்கைகள், கூட்டத் தொடர்களின்போது தங்கள் தரப்பிலிருந்து, அதைச் செய்கின்றோம் இதைச் செய்கின்றோம், புதிதாக அந்த ஆணைக்குழுவை உருவாக்கியுள்ளோம், இந்த நல்லிணக்கக் குழுவை உருவாக்கியுள்ளோம் என்று அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துவிட்டு இந்தப் பிரச்சினைகளைக் கடந்து சென்றுவிட முடியும் என்று இலங்கை அரசுக்கு நன்றாகவே தெரியும் என்பதால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆட்சியாளர்களுக்கு எந்தப் பதற்றமும் இல்லை.

அதேநேரம், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களால் லாபமடைந்த தரப்பு யார் என்பது அனைவருக்கும் தெரியும். இப்போது அது தொடர்பான உண்மைகள் பலவற்றைத் தாங்கி வந்திருக்கக்கூடிய இந்தப் படத்தால் யார் அரசியல் லாபமடையப் போகிறார்கள் என்பதுதான் இப்போதுள்ளகேள்வி. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பொது ஜன பெரமுன முரண்டு பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், அதனை மூக்கணாங் கயிறு இப்போது ரணிலின் கைகளுக்குஇந்தக்காணொளி மூலம் கிடைத்துள்ளது. பெரமுனவையும் ராஜபக்சக்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இந்தக் காணொளி ஒருவேளை உதவக்கூடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உயிர்த்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டன. அந்தப் பிரச்சினைகளால் தேர்தலில் நாங்கள் பின்வாங்கினோம், கோட்டாபய முன்னிலை பெற்றார்என்பதேஉண்மை. அந்த நம்பிக்கையில்தான் அவரை மக்கள் ஜனாதிபதியாக்கினர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களை கண்டறிய வெளிநாட்டு உபதேசங்கள் எமக்கு அவசியமா? எமது நாட்டின்ஆட்சியாளர்களுக்கு மனச்சாட்சி இல்லையா? உண்மைகளை கண்டறியவும், உண்மையை பேசவும் எமது நாட்டு அரசியல்வாதிகளுக்குப் பொறுப்பில்லையா?.

பேராயர் கர்தினால்எனக்கு எதிராக வாக்களிக்குமாறு அன்று கூறியதற்காக நான் கவலைப்படவில்லை. அவர் தமது மனதுக்குள் இருந்த கவலைகாரணமாகஅவ்வாறு கூறியிருந்தால்நான்அதற்காக கவலைப்படப்போவதில்லை.

கிறிஸ்தவ மக்களுக்கு இந்தக் கவலை இன்னமும் உள்ளது. எமது நாட்டின் உள்ளக விசாரணைகளின் ஊடாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை கண்டறிய முடியாது. இதற்கு சர்வதேச விசாணையொன்றுஅவசியமாகும்.

பேராயர் கர்தினாலுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவேண்டாம். கிறிஸ்தவ மக்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவேண்டாம். தற்போதைய ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்துக்கு வருவதற்கான தேவை மட்டுமே இருந்தது. அதனால்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்குறித்துமுதலை கண்ணீர் வடித்தனர். ஆகவே, உடனடியாக சர்வதேச விசாரணையொன்று அவசியமாகும். அதற்கு இந்த ஆட்சியாளர்களுக்கு முதுகெலும்பு இருக்கிறதா எனக் கேட்கிறோம் -என்றார்.

## சரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று கூறியல்லவா ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்தனர். அதனை முன்னெடுத்து இருந்தால் இப்பொழுது கட்டுக் கதைகள் என்று கூறப்படுகின்ற விடயங்கள் வெளிப்பட்டிருக்காது அல்லவா? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சரத்வீரசேகர, நல்லாட்சியிலிருந்த சில அரசியல் தரப்பினர் கைது செய்யப்பட்டவர்களை விடுவித்ததன் காரணமாகவே எம்மால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தடுக்க முடியாமல் போனது. ஆகவே நல்லாட்சி அத்தாக்குதல் நிகழ்ந்தமைக்கான முழுமையான பொறுப்பினைஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

## நீதித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

உயிர்த்த ஞாயிறு சம்பவம்தொடர்பாகசனல்-4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்டுள்ள காணொளி சம்பந்தமாக அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை. வழமையாக அமைச்சர வையில் நிகழ்ச்சி நிரலிடப்பட்ட விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்களே நடைபெறும். விசேட விடயங்கள் பிறிதாக வரையறுக்கப்பட்டு கவனம் செலுத்தப்படும். எனினும்,நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிஉறுப்பினர்ஒருவர் இது தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார். இங்கு ஒரு விடயத்தை அவதானிக்க வேண்டும். ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் தொடங்குகின்றபொழுது இவ்வாறான விடயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றமை பழக்கப்பட்ட ஒரு விடயமாக இலங்கைக்கு மாறியிருக்கிறது.

சனல்-4தொலைக்காட்சி இதற்கு முன்னதாகவும் இவ்விதமான காணொளிகளை வெளியிட்டு எமது நாட்டிற்கும், எமது இராணுவத்தினருக்கும் எதிராகக் குற்றச்சாட்டுகளைமுன்வைத்திருக்கிறது. இந்த விடயத்தை முழு உலகமும் உள்நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரும் நன்கு அறிவார்கள். ஆகவே இவ்விடயம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் உரிய பதில் அளிக்கப்படும் - என்றார்.

## ராஜபக்ஷக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரங்கேற்றி அந்த பழியை முஸ்லிம் மக்கள்மீது சுமத்தியுள்ளனர்.

இலங்கையின்பொருளாதாரத்திற்குப் பெரும் பங்காற்றிய முஸ்லிம் சமூகத்தை ஒரே நாளில் குற்றவாளியாக்கி, அவர்களின் பொருளாதாரத்தைஅழித்துள்ளனர்.

சிங்கள மக்களை முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திருப்பியிருந்தனர். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்குகளை பெற்றுக்கொண்டார்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே.

சிங்கள மக்கள் ஒன்றை நிதானமாகச் சிந்திக்கவேண்டும். 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாத இராணுவத்தினர் சிங்கள மக்கள், பிக்குகள் பயணித்த பேருந்தில் குண்டு வைத்தனர். இதன் மூலம் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் திரும்ப வைத்து ஒரு இன அழிப்பை மேற்கொள்வதற்கு ராஜபக்ஷக்கள் சதி செய்தனர்.

இதனை சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாக மட்டுமே வெளிக்கொண்டு வர முடியும். இந்நிலையில், பிள்ளையான், ராஜபக்ஷக்கள் போன்றவர்கள்உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டும். அவர்களுக்கு எதிராக சர்தேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலா 6 மாணவர்கள் 3 ஏ மற்றும் 2 ஏ,பி சித்தியினைப் பெற்றுள்ளனர்.

வவுனியாமாவட்டத்தின் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 58 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தர சித்தியினையும் 66 மாணவர்களில் 2 ஏ பி தர சித்தியினையும் பெற் றுள்ளனர்.

வவுனியா வடக்கில் 5 மாணவர்கள்3பாடங்களிலும் ஏ தர சித்தி எய்தியதோடு 8 மாணவர்கள் 2 பாடங்களில் ஏ தர சித்தியும் ஒரு பாடத்தில் பிதரத்திலானசித்தியினையும் பெற்றுள்ளனர்.

மன்னார் கல்வி வலயத்தில் 18 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தரச் சித்தியை பெற்ற அதேநேரம் 41 மாணவர்கள் 2 ஏ, பி சித்தியினைப்பெற்றுள்ளனர்.

இதேபோன்றுமடுக்கல்வி வலயத்தில் 5 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தர சித்தியினை பெற்றுள்ளனர். கணிதபாடத்தில்மாவட்டத்தில் முதலிடத்தினையும் இதே வலயத்தைச் சேர்ந்த அடம்பன் மகா வித்தியாலய மாணவன் பெற்றுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இம்முறை 3 ஏ தர சித்திபெற்ற மாணவர்களைவிடவும் 2 ஏ.பி தர சித்தி எய்திய 80 மாணவர்கள்தர வரிசையில் முன்னிலை பெற்றுள்ளனர்.

## தேர்தல்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவா தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது. அவ்வாறான முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

அதில் எவ்வித சந்தேகங்களையும் ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. அடுத்த வருடம் உரிய நேரத்தில் அனைத்து தேர்தல்களும் இடம்பெறும். அதற்குரியநடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் - என்றார்.

## வாகன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்படுகிறது.

அத்துடன், சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு(திருத்த)சட்டமூலமும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் ஆராயப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

இதற்கமைய,. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தித்தீர்வைபொருந்தும் ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பாக வரிக்கட்டமைப்பை இலகுபடுத்த அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வையை ஒரு கூட்டு வரியாகக் கருத்தில் கொண்டு இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்கள் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டு அத்தகைய நபர்களின் வரிச்சுமையைக் குறைப்பது, வெட்டப்பட்டு மெருகூட்டப்பட்ட பின்னர் மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதிசெய்யப்படுகின்ற கரடுமுரடானசீர்செய்யப்படாத மாணிக்கக் கற்கள், வரிச்சுமையைக்குறைப்பதன் மூலம் உலக சந்தையில் அத்தகைய இலங்கை வணிகத்தின் போட்டித் தன்மையைப் பேணுவது, தீர்வையற்ற விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருட்கள் குறித்தும் இந்தத் திருத்தத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதும், மாற்றுத்திறனாளிகளுக்கானஅணுகல் வசதிகள் இல்லாதபோது, வரிச்சுமையைக் குறைக்க மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்களிலிருந்து விலக்கு அளிப்பதன் நோக்கம், செயல்திறன் மற்றும்தாக்கம் குறித்து அதிகாரிகளிடம் குழு கேள்வியெழுப்பியிருந்தது.

இக்கூட்டத்தில்இராஜாங்க அமைச்சர் (கலாநிதி) சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, வஜிர அபேவர்தன, பாட்டலி சம்பிக்க ரணவக, நிமல் லான்சா, இசுறுதொடங்கொட, (கலாநிதி) மேஜர் பிரதீப் உதுகொட, (கலாநிதி) நாலக கொடஹேவா, மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்

## ஏப்ரல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்சம்பவம்தொடர்பில் சனல் -04 ஊடகம் 15 நிமிட காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தக் காணொளிதற்போது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.

தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவர் ஒருவரை உருவாக்குவதற்காக இந்த குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்த காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள பின்னணியில்தான்சனல்-04 இவ்வாறானகாணொளிகளை வெளியிடுகிறது.

வெள்ளைக் கொடி ஏந்தி வந்த அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என குறிப்பிட்ட சனல் -04 தான் தற்போது ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து செய்திகளையும் வெளியிட்டுள்ளது.

சனல் -04 தொலைக் காட்சிக்குமுறைப்பாடுஅல்லது தகவல்களை வழங்கியுள்ள அன்ஷிப் அசாத் மௌலானா என்ற நபர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஊடாக ஊடகச் செயலாளராக அடையாளப்படுத்தப்பட்டவர். இந்த நபர் சுவிஸ்லாந்து நாட்டில் அரசியல் பாதுகாப்பு கோரியுள்ளார்.

அன்ஷிப் அசாத் மௌலானா என்ற இந்த நபரின் தனிப்பட்ட வங்கி கணக்குக்கு2018ஆம்ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து 700 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. அத்துடன் அவர் தெஹிவளையில் உள்ள தனது வீட்டை 500 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார். இந்தளவு செல்வந்தரான இந்த நபர் 2017ஆம் ஆண்டு முதலாவதாக பணியில் இருந்தபோது 6000 ரூபா மாதசம்பளமேபெற்றுள்ளார்.

மாதம் 6000 ரூபா சம்பளம்பெற்றநபரின் வங்கி வைப்பில் 700 மில்லியன் ரூபாவைவைப்பிலிடப்பட்டுள்ளது. மறுபுறம் 500 மில்லியன் ரூபாவுக்கு வீட்டை விற்றுள்ளார்.

இவர்தான் தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவர் ஒருவரை உருவாக்க ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதாக குறிப்பிடுகிறார். இவருக்கு எதிராகபொலிஸில்நிதிமோசடி உள்ளிட்டபலமுறைப்பாடுகள் உள்ளன.

இந்தக்குற்றச்சாட்டுக்கள் முறையற்றவை. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் 2019ஆம் ஆண்டு இடம்பெற்றது. ஆனால்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...




காலைக்கதிர் Kalaikkathir

# தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்ட நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறைவு செய்க

## அமைச்சர் பிரசன்ன பணிப்பு



கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்ட கொழும்பு மாவத்தை மற்றும் டொரிங்டன் மாவத்தை வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகளை விரைவாக முடிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இரண்டு வீடமைப்புத் திட்டங்களின் கீழ் 735 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த இரண்டு வீட்டுத் திட்டங்களும் நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

இதற்காக செலவிடப்படும் தொகையை பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட துறைகளுடன் பேச்சு நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் நிதி அமைச்சுடன் இது பற்றிக் கலந்துரையாடியுள்ளார்.

நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 25 வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 23 வீட்டுத்திட்டங்கள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கிறது.

பூர்த்தி செய்யப்பட்ட 23 வீட்டுத் திட்டங்களின் கீழ் 14,049 வீடுகள் கட்டப்பட்டுள்ளன என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தெமட்டகொட-மிஹிந்துசென்புர, ஒருகொடவத்த-புரதொர செவன, பொரளை- சிரிசர தோட்டம், பொரளை-மத்சர தோட்டம், புளுமெண்டல்-சிரிசந்த செவன, வெள்ளவத்தை-லக்முத்து செவன, ஹேனமுல்ல-ந்திய தோட்டம், எதிரிசிங்கவத்த-சிறிமுத்து தோட்டம், பெர்கியூஸன் வீதி-மூவதுர தோட்டம், மாளிகாவத்தை - லக்ஹிரு செவன, சாலமுல்ல- லக்சந்த செவன கட்டம் 1 மற்றும் கட்டம் 2, பிரதீபா மாவத்தை-சியசெத செவன, புளுமெண்டல்- ஜயமங்க செவன, மாளிகாவத்தை - லக்செனசெவன, ஹேனமுல்ல- மெத்சந்த செவன, தெமட்டகொட- சியபத் செவன, ஹேனமுல்ல-சத்ஹிரு செவன, கொலொன்னாவ-சங்கிந்த செவன, ஹேனமுல்ல- மிஹிஜய செவன, ஹேனமுல்ல- ஹெலமுத்து செவன, ஹேனமுல்ல- ரன்மித்து செவன, பொல்கேன்கொட - கொலொம்தொட்ட சரசவி உயன ஆகியன கட்டி முடிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களாகும்

நகர மறுமலர்ச்சித் திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. கொழும்பில் உள்ள சேரிகளில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மாற்று வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் நிலத்தை அபிவிருத்தி நோக்கங்களுக்காக பயன்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

2010ஆம் ஆண்டு கொழும்பு நகரை திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி செய்யும் முக்கிய நோக்கத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அரசாங்க கொள்கையாக நகர மறுமலர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சுயநிதி மாதிரியுடன் கூடிய திட்டமாக இதை செயற்படுத்துவதே நோக்கமாக இருந்தது.

இதன்படி, திறைசேரியில் இருந்து 10 பில்லியன் ரூபா கடன் பத்திரப்பதிவு மூலம் ஆரம்ப செலவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்டத்துக்காக விடுவிக்கப்பட்ட நிலத்தை மீண்டும் வீடுகள் கட்டவும், கலப்பு வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தவும், நகரை பாதுகாத்து அழகுபடுத்தவும், நகர வளர்ச்சித் திட்டத்துக்கு தேவையான நிதியை உருவாக்க திட்டமிடப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபை 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் ஒரு கணக்கெடுப்பை நடத்தியதோடு, அந்தத் திட்டத்துக்கேற்ற 1,500 தோட்ட குடியிருப்புகளில் 68,000 வீட்டு அலகுகளை அடையாளம் கண்டுள்ளது.

இதன் மூலம் தோட்டங்களை புனரமைப்பதன் மூலம் அடையாளம் காணப்படும் சுமார் 900 ஏக்கர் நிலத்தில் 300 ஏக்கர் புதிய அடுக்கு மாடி குடியிருப்புகளுக்காகவும், 150 ஏக்கர் பொது பொழுதுபோக்குக்காகவும் ஒதுக்கப்பட்டு, மீதமுள்ள 450 ஏக்கர் நிலம் கலப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்.

வீடுகள் கட்டுவதற்கான நிதியை உருவாக்குவதற்கான அடிப்படைத் திட்டங்களும் தயாரிக்கப்படவுள்ளன எனக் கூறப்படுகிறது.(05)

## தேவாலயத்தில் உண்டியல்கள் உடைத்துத் திருட்டு



மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் எருக்கலம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி தேவாலயத்தில் உள்ள இரண்டு உண்டியல்கள் உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

1544 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வரலாற்றுச் சிறப்பை கொண்டதாக விளங்கும் இந்த தேவாலயம், சிறியதொரு அமைப்பில் காணப்படுகிறது.

இந்தத் தேவாலயத்துக்கு நாடளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து போகின்றமை வழக்கம். அவர்கள் ஆலய வளாகத்தில் உள்ள மணல் மற்றும் மனித எலும்புத் துண்டுகளை எடுத்துச்சென்று, தமது வேண்டுதல்களை நிறைவேற்றும் புதுமையான வழிபாட்டு முறையும் அங்கு காணப்படுகிறது.

இத்தகைய சிறப்பைக் கொண்ட இந்த தேவாலயத்தின் பிரதான உண்டியல்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு, பணம் திருடப்பட்டுள்ளது. உடைக்கப்பட்ட உண்டியல்களில் இருந்த பணம் ஆலயத் தேவைக்காக கடந்த இரண்டு வருடங்களாக சேமிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு உண்டியல்களிலும் பல லட்சம் ரூபா பணம் இருந்திருக்கக்கூடும் என ஆலய காப்பாளர் மற்றும் கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, எருக்கலம்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

எனினும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இதனால் பொலிஸார் விசாரணைகளை மேலும் தீவிரப்படுத்தி வருகின்றனர். (05)

## நீதிமன்ற சான்றுப் பொருளான பொலிஸாரின் துப்பாக்கியே கொலைக்குப் பயன்பட்டது

மாத்தறை, திக்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துக்கு திக்வெல்ல, மாத்தறை நீதிவான் நீதிமன்றில் சாட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அது ஹக்மன பொலிஸாருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த ரி-56 ரக துப்பாக்கி, திக்வெல்ல முதுகமுவ பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக திக்வெல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

குறித்த துப்பாக்கி தொடர்பான விசாரணையின் போது, ஹக்மன பொலிஸாருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி எனத் தெரியவந்துள்ளதுடன், ஒருவரின் மரணம் தொடர்பான வழக்கு தொடர்பில் இரண்டு ரி-56 துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர் என்பன நீதிமன்றால் பொறுப்பேற்கப்பட்டு சாட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்தமையும் அவற்றில் ஒன்றே இது என்பதும் தெரியவந்துள்ளது. (05)

## உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாத்தறை மாணவி சாதனை

2022 (2023) ஆண்டுக்கான கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் திங்கட்கிழமை மதியம் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், உயிரியல் பிரிவில் மாத்தறை மாவட்ட மாணவி ஒருவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

பிரமுதி பானி முனசிங்க என்ற மாணவியே இவ்வாறு முதலாம் இடத்தை பெற்று பாடசாலை சமூகத்துக்கும், தனது மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (05)

## கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் கணிதப் பிரிவில் மாவட்டத்தில் முதலிடம்



வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் கிளிநொச்சியை சேர்ந்த சண்முகம் மாதுளன் என்ற மாணவன் மாவட்ட ரீதியில் முதலிடம் பிடித்துள்ளார்.

கணிதப் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இந்த மாணவன் முதலிடத்தைப் பெற்று பாடசாலை சமூகத்துக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

ஏற்கனவே 2020 இல் இவரது சகோதரி சண்முகம் வைஸ்ணவி கணித பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## பாடசாலை மாணவர்களின் கைத்தொலைபேசி பாவனைக்கு கட்டுப்பாடுகளை விதிக்க ஏற்பாடு

பாடசாலை மாணவர்களின் கைத்தொலைபேசி பாவனைக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் அது தொடர்பான சட்ட கட்டமைப்பை தயாரிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 18 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி பாவனைக்கான தடைச் சட்டத்தை கொண்டு வரத் தயார் எனவும், இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கைத்தொலைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சிறுவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும், மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் குழந்தைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பல சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளால் தமது வாழ்வை நாசமாக்கிக் கொண்டிருப்பதாகவும், இன்று அவர்கள் பாடசாலைக்கு கையடக்கத் தொலைபேசியைக்கூட எடுத்துச் செல்வதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார். (05)

## கண்டறியப்பட்ட 15 பேர் பற்றிய விவரங்களை சர்வதேச அமைப்புகளுக்கு அனுப்ப ஏற்பாடு

### காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தெரிவிப்பு

காணாமல்போனோர் பற்றிய முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்ட 15 பேர் தொடர்பான விவரங்களை வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் இயங்கிவரும் சர்வதேச அமைப்புக்களுக்கும் அனுப்பிவைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தெரிவித்துள்ளது. 2000-2021 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் 15 பேருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டிருப்பதாகக் கடந்தவாரம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்தவால் அறிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 15 பேரில் ஒருவர் உயிரிழந்திருப்பதாகவும், மூவர் புலம்பெயர் நாடுகளில் வசித்துகின்றனர் எனவும் குறிப்பிட்ட அவர், எஞ்சிய 11 பேரும் வயோதிபம் மற்றும் பல்வேறு நோய்நிலைமைகளின் விளைவாக உள்நாட்டில் வெள;வேறு பகுதிகளில் வசித்துவந்தனர் எனவும், சிலர் வெளிநாடுகளுக்குச்சென்று திரும்பியதாகவும் விளக்கமளித்தார்.

அதுமாத்திரமன்றி தற்போது அவர்கள் குடும்பத்தாருடன் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.

இருப்பினும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அவர்களது பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறு கோரி நீண்டகாலமாகப் போராடிவரும் உறவுகள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் இந்த அறிவிப்புக் குறித்து பல்வேறு சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக 15 பேர் கண்டறியப்பட்டிருப்பதாகக் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் கூறுவதைத் தாம் எவ்வாறு நம்புவது என்று கேள்வி எழுப்பியுள்ள அவர்கள், இவ்விடயம் தொடர்பில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இதுபற்றி காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திடம் வினவியபோது, மேற்குறிப்பிட்ட 15 பேர் தொடர்பான தகவல்களை வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும், குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் இயங்கிவரும் சர்வதேச அமைப்புக்களுக்கும் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக பதில் கிடைத்தது.

எனவே அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர், சம்பந்தப்பட்ட அமைப்புக்களால் சர்வதேச நியதிகளுக்கு அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக இவ்வாறு கண்டறியப்பட்டோர் தொடர்பான விவரங்கள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் உள்ளிட்ட முக்கிய சர்வதேச அமைப்புக்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பின்னர் அந்த அமைப்புக்கள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் கண்டறியப்பட்டோர் தொடர்பான முறைபாடுகளையும், கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட குடும்பங்கள் தம்மிடம் அளித்த முறைப்பாடுகளையும் ஒப்பிட்டு நோக்கி, அவை ஒரே முறைப்பாடுகளா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, கண்டறியப்பட்ட நபர் தொடர்பான உண்மைத்தன்மையையும் ஆராய்ந்து, அறிக்கையொன்றை வெளியிடும். எனவே மேற்கூறப்பட்ட 15 விவகாரத்திலும் இச்செயன்முறை உரியவாறு பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (05)

## கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சர்ச்சையை ஏற்படுத்திய பிள்ளையானின் வருகை

காலம் காலமாக சைவ விழுமியங்களாக மட்டக்களப்பில் உள்ள பிரபல ஆலயங்களில் ஆண்கள் மேல் அங்கியை கழட்டி விட்டு ஆலயத்துக்குள் செல்வது பாரம்பரியமாக நடந்து வருகின்றது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட் டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் பந்தலகுனவர்த்தன மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் சி. சந்திரகாந்தன் உட்பட அவருடைய சகாக்கள் கொக்கட்டி சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு மேலங்கியை கழட்டவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. காலில் அணிந்திருக்கும் காலுறையை கழட்டிவிட்டு காலை கழுவிவிட்டுத்தான் கோயிலுக்குள் நுழையவேண்டும் என்பது சைவசமயத்தின் விழுமியம். ஆனால் அவை எதனையும் செய்யாமல் ஆலய தரிசனம் செய்தது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் தற்போது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மட்டக்களப்புக்கு வருகை தந்த அமைச்சருடன் ஆலய விழுமியங்களை அவமதித்து அதை தங்களது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டமை மட்டக்களப்பு மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.(05)

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்வதேச விசாரணை!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பது தொடர்பில் சனல் –4 தொலைக்காட்சி வெளியிடவுள்ள காணொளி தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. குறிப்பாக இந்தக் காணொளியில் எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படவேணடும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன. சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும், அதற்கு இந்த ஆட்சியாளர்களுக்கு முதுகெலும்பு இருக்கின்றதா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் அரசியல் ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டவர் அவர். 2019 அரசுத் தலைவர் தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்சவின் பக்கம் சிங்கள மக்களின் அலை அடிப்பதற்கு இந்தக் குண்டுத் தாக்குதல்கள் மிகப் பெரும் காரணமாக அமைந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதனால் சனல் –4 காணொளி தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு அவர் அழைப்பு விடுக்கின்றார்.

அதேநேரம் இதற்கு முன்னர் இறுதிப் போரில் நடந்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலும் சனல் –4 தொலைக்காட்சி 2 காணொளிகளை வெளியிட்டிருந்தது. அதில் அரச படைகளிடம் சரணடைந்தவர்கள் நீதிக்குப் புறம்பாகச் சுட்டுக்கொல்லப்பட்டது உள்ளிட்ட பல போர்க்குற்ற ஆதாரங்கள் காட்டப்பட்டன. ஆனால், அந்தக் காணொளிகள் குறித்து இவ்வாறு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கோரவில்லை. எல்லாம் தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்றுமாம் என்பதைப் போலத்தான்.

இறுதிப் போரில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று தமிழர் தரப்பு தொடர்ந்து வியுறுத்திவருகின்றது. நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சதி குறித்தும் சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்று வலியுறுத்தினார். உள்நாட்டு விசாரணைகளின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டதனாலேயே தமிழர் தரப்பு நீண்ட காலமாக சர்வதேச விசாரணையைக் கோரி வருகின்றது. உள்நாட்டு விசாரணைக் எதுவும் நீதியாக, நேர்மையாக, பக்கச்சார்பற்று நடக்காது என்று கருதியதன் காரணத்தாலேயே அந்த நிலைப்பாட்டைத் தமிழ் தரப்பினர் எடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் இப்போதுதான் அந்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளார். அதனை அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மட்டுப்படுத்திக்கொள்ளாமல், இறுதிப் போரின் போது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் தொடர்பிலும் சர்வதேச விசாரணை நடத்தப்படவேணடும் என்று அவர் வலியுறுத்தவேண்டும். அதன் மூலமே தமிழர்களுக்குப் பரிகார நீதி கிடைக்கும் என்பதுடன் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு இனிவரும் காலங்களிலாவது இத்தகைய குற்றங்கள் இடம்பெறாமல் இருப்பதையும் உறுதிப்படுத்த முடியும்.

எனவே தமிழர் தரப்பின் கோரிக்கையான சர்வதேச விசாரணை வேண்டும் என்பதில் இலங்கையின் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைவேண்டும்.



# தங்கக் கடத்தல்! உண்மையும் கேள்வியும்

ந.லோகதயாளன்

கடந்த ஜனவரி மாதம் முதல் இற்றைவரை இந்தியாவின் மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகளால் 178 கிலோ தங்கம் தமிழ்நாட்டின் தென்கரையோரத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கத்தின் விலை மதிப்பு இந்திய நாணயத்தில் 105 கோடி ரூபா. இந்தத்தகங்கக்கடத்தல்தொடர்பான 30 வழக்குகளில் 45 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்தியாவின் மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்திய மத்திய வருவாய் துறை அதிகாரிகள் அண்மையில் ஒரே நாளில் மூன்று இடங்களில் நடத்திய அதிரடிச் சோதனையில் 12.5 கோடி இந்திய ரூபா மதிப்பிலான 20.5 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அதன் பின்னர் 14.8 கிலோ தங்கத்தை இராமேஸ்வரத்தில் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

கடல்வழியாக இலங்கையிலிருந்து தங்கம் கடத்திச் செல்லும் நிகழ்வுகள் சமீப காலமாக மிகவும் அதிகரித்து வருவதையடுத்து இந்தியாவின் மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் விமான நிலையங்கள் மற்றும் கடற்கரைப் பகுதியில் தொடர்ந்து தீவிர சோதனை ஈடுபட்டு வருவதோடு கணிசமான அளவான தங்கத்தையும் கைப்பற்றுகின்றனர்.

ஜூலை 31 அன்று சார்ஜாவில் இருந்து கோயம்புத்தூர் சென்ற விமானப் பயணிகளிடம் சோதனை செய்தபோது இரண்டு பயணிகள் 3.17 கோடி இந்திய ரூபா மதிப்பிலான 5.17 கிலோ தங்கத்தை இலங்கையில் இருந்து கொண்டுசென்றது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர்களிடம் இருந்து அந்தத் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும் சென்னை விமான நிலையத்திற்கு வெளியே சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த ஆறு பேரை பிடித்து மேறகொண்ட விசாரணையின்போது அவர்கள் 3.8 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள 6.275 கிலோ கடத்தல் தங்கத்தை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அந்தத் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.



அதை தொடர்ந்து இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தமிழ்நாடு ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் கடல் பகுதியில் நடத்திய அதிரடி சோதனையில் 5.37 கோடி மதிப்பிலான 9.063 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டுநாட்டுபடகுகளையும் அதிலிருந்த நான்கு பேரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் 2023 ஜனவரி மாதத்தில் இருந்து மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் 105 கோடி ரூபா மதிப்பிலான 178 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் 29 வழக்குகளில் 43 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மத்திய வருவாய் புலனாய்வுத்துறை வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிலும் இலங்கையில் இருந்து கடத்தப்பட்ட 121 கிலோ தங்கம் இந்தியாவில் பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்தியாவில் கைப்பற்றும் தங்கத்தின் பெறுமதியை கணக்கிட்டால் இந்தியா இலங்கைக்கு வழங்கிய கடன் தொகையை அண்மித்து விடுமோ என்ற எண்ணமும் தோன்றும்.

அதேநேரம் இலங்கைக்கு எடுத்துவரும் ஆயிரக்கணக்கான கிலோ கஞ்சாவினையும் பீடி இலைகளையும் கைப்பற்றும் இலங்கை கடற்படையினரிடம் ஏன் தங்கம் அகப்படுவதில்லை என்ற கேள்வக்கு விடை கிடைக்கவில்லை. அதேபோன்று இலங்கையில் கடற்படையினரால் பிடிக்கப்படும் பெருந்தொகைக் கஞ்சாவும் ஹெரோயினும் ஏன் இந்திய அதிகாரிகளால் பிடிக்கப்படுவதில்லை என்ற கேள்விக்கும் விடை கிடைக்கவில்லை.

இந்திய அதிகாரிகளின் கண்ணை கட்டிவிட்டு எடுத்து வரப்படும போதைப் பொருள் முழுவதையும் பிடக்காது விட்டாலும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்காண கிலோ கஞ்சா கடற்படையினரால் பிடிக்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 95 கிலோ கஞ்சாவும் 2022 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 865 கிலோ கஞ்சாவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டபோதும் கஞ்சா கடத்தல் இன்றுவரை தொடர்கின்றது.


இதேநேரம் இந்த ஆண்டில மட்டும் இந்தியாவில் 09 தடவைகள் தங்கம் கைப்பற்றப்பட்டபோதும் இலங்கையில் ஒருதடவைகூட அவை பிடிக்கப்படவில்லை.

இவ்வாறு இரு நாடுகளிடையேயும் கஞ்சாவும் தங்கமும் பீடி இலைகளும் தொடர்ந்தும் கடத்தப்படுவதைப் பார்க்கையில், இந்தியாவில் இருந்து வரும் கஞ்சா, ஹெரோயின் மற்றும் பீடி இலைகளிற்கான பணம் இலங்கையில் இருந்து தங்கமாகச் செல்கின்றதா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

**மேலும் சென்னை விமான நிலையத்திற்கு வெளியே சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த ஆறு பேரை பிடித்து மேற்கொண்ட விசாரணையின்போது அவர்கள் 3.8 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள 6.275 கிலோ கடத்தல் தங்கத்தை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அந்தத் தங்கம் பறிமுதல் செய்யப் பட்டதுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.**

**QUANTITIES OF DRUGS APPREHENDED BY SLN FROM 2010 TO 22 SEP 2022**

| YESAR | QUANTITY (KG) | | | |
|---|---|---|---|---|
| | HEROIN | KERALA CANNABIS | ICE | LOCAL CANNABIS |
| 2010 | - | - | - | - |
| 2011 | 7.24 | 116.85 | - | - |
| 2012 | - | 39.68 | - | - |
| 2013 | - | 156.60 | - | 29.52 |
| 2014 | 0.36 | 381.69 | - | 20.68 |
| 2015 | 0.00 | 594.27 | - | 44.35 |
| 2016 | 113.33 | 1669.09 | - | 7235.96 |
| 2017 | 29.95 | 1695.43 | - | 3219.79 |
| 2018 | 232.04 | 2113.74 | 0.11 | - |
| 2019 | 762.25 | 3653.43 | 3.01 | 21.27 |
| 2020 | 821.45 | 4976.40 | 900.50 | 361.80 |
| 2021 | 1268.85 | 7095.05 | 158.97 | 69.03 |
| 2022 | 917.44 | 4865.49 | 18.76 | 24.51 |
| TOTAL | 4152.91 | 27357.70 | 1081.35 | 11026.91 |



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர்
Kalaikkathir

# எரிபொருள் மற்றும் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டமை நியாயமற்றது

## திஸ்ஸ அத்தநாயக்க சாடல்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அண்மைய அறிக்கையில் இலங்கையின் மிக மோசமான நிலைமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய இந்த சந்தர்ப்பத்தில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை நியாயமற்றதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை நியாயமற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டு பயணங்களின் போது இலங்கைக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் அவை மக்களை சென்றடைவதைக் காணக்கூடியதாக இல்லை.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அண்மைய அறிக்கையில் இலங்கையின் மிக மோசமான நிலைமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

குறிப்பாக வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஸ்திரமான நிலைப்பாடு அறிவிக்கப்படவில்லை. அரசாங்கம் மக்களின் உண்மையான பிரச்சினைகளை இன்னும் இனங்காணவில்லை.

ஏற்கனவே இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கவும் இல்லை. அதற்கான வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை.

இந்த ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளிடமும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலுள்ள கட்சிகளிடமும் இது குறித்த பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம். -என்றார். (05)

# இந்த ஆட்சியின் முடிவுகளால் மக்கள் பாதிப்படைவதை ஏற்கவே முடியாது

## பொதுஜன பெரமுன செயலாளர் சாகர தெரிவிப்பு



பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்களால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதியின் கொள்கைக்கு முரணாக நாங்கள் பொருளாதார கொள்கைகளை முன்வைப்போம். எமது கொள்கைகளை ஏற்பதா? அல்லது தற்போதைய நிலையை முன்னெடுத்துச் செல்வதா? என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மீது மக்கள் வைத்த நம்பிக்கை பலவீனமடையகூடாது என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

ராஜபக்ஷர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு பாரிய போராட்டம் மேற்கொள்ளப்பட்ட பின்னணியில் தான் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினோம்.

வரிசலுகை வழங்கியது தவறு என்ற குற்றச்சாட்டு எமது அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்பட்டது.

தற்போது வரி விதிப்பு எதிராக ஒரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். போராட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது செயற்படுத்துகிறார்.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்களால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் கொள்கைக்கு முரணாக நாங்கள் பொருளாதார கொள்கைகளை முன்வைப்போம்.

எமது கொள்கைகளை ஏற்பதா? அல்லது தற்போதைய நிலையை முன்னெடுத்துச் செல்வதா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

திறந்த மற்றும் மூடிய பொருளாதார கொள்கைகளை முழுமையாக அமுல்படுத்தாமல் நடுநிலையான பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும் என்று நாங்கள் குறிப்பிட்டதை நாட்டு மக்களும், எதிர்க்கட்சியினரும் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.- என்றார். (05)

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் பிள்ளையானின் சகாவும் உள்ளார்

## வெளியாகிய அதிர்ச்சியூட்டும் தகவல்



கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிடப்போவதாக சனல்-4 அறிவித்துள்ள நிலையில், கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானிள் முன்னாள் பேச்சாளரே இதில் முக்கிய பாத்திரம் வகிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

'இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் - அனுப்புதல்கள்' என்ற தலைப்பில் ஒளிபரப்பப்பட்ட இந்த நிகழ்ச்சியில், 'அரசாங்கத்திற்குள் உள்ள அதிகாரிகளே, தாக்குதல்களுக்கு உடந்தையாக இருந்தனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது புகலிடம் கோரி சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவாவில் வசிக்கும் பிள்ளையானின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானவே இந்த காணொளியின் முதன்மையான ஆதாரமாக இருப்பதாக தகவலறிந்த தரப்புகள் தெரிவித்தன.

இந்த காணொலியை ஓகஸ்ட் 15 ஆம் திகதி ஒளிபரப்ப செனல்-4 திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் சனல்-4 இற்கு, இலங்கையின் அரச புலனாய்வு சேவையின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி தனது சட்டத்தரணிகள் மூலம் வழங்கிய தெளிவுபடுத்தலைத் தொடர்ந்து,

அன்றைய தினம் காணொலி ஒளிபரப்பை நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், சம்பவங்கள் தொடர்பில், ஆசாத் மௌலானா, தனது பெயரைப் பயன்படுத்தியுள்ள காலத்தில், தாம் இலங்கையில் கடமையாற்றவில்லை என்பதை, மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி, உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் சனல்-4 இற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலியின் பதிலைத் தொடர்ந்து, சனல்-4 காணொலியின் தலைப்பை மாற்றி அதனை ஒளிபரப்பத் திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே சனல் 4 இலங்கையின் கொலைக்களம் என்ற தலைப்பில் ஓர் ஆவணப்பட காணொலியை ஒளிபரப்பியது. இது இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் இறுதி வாரங்கள் பற்றிய அதிர்ச்சியூட்டும் காணொலியாக வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 2023ஆம் ஆண்டில் இதுவரை 2 லட்சம் பேர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளனர்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

2023 ஆம் ஆண்டு ஆரம்ப 8 மாதங்களுக்குள் 2 லட்சத்து 387 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இவர்களில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 635 ஆண் தொழிலாளர்கள் என்பதுடன் 86 ஆறாயிரத்து 752 பேர் பெண் தொழிலாளர்களாவர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் அதிகமாக தொழில் நிமித்தம் சென்றிருப்பது சவுதி அரேபியாவுக்கு என்பதுடன் இதன் எண்ணிக்கை 44 ஆயிரத்து 827 ஆகும். இரண்டாவதாக குவைட் நாட்டுக்கே அதிகமானவர்கள் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர். அதன் எண்ணிக்கை 39 ஆயிரம் ஆகும். மூன்று மற்றும் நான்காவதாக கட்டார் மற்றும் ஐக்கிய அரபு ராச்சியத்துக்கே அதிகமானவர்கள் தொழில் நிமித்தம் சென்றிருக்கின்றனர். அதன் எண்ணிக்கை முறையே 34 ஆயிரத்து 166 மற்றும் 25 ஆயிரத்து 58 ஆகும்.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையர்கள் தொழிலுக்காக அனுப்பப்படும் போக்கில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 2023ஆம் ஆண்டு முதல் 8 மாதங்களுக்குள் ருமேனியாவுக்கு 9 ஆயிரத்து 916 பேர் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர். அத்துடன் பயிற்சி மற்றும் தொழில் சேவைக்காக ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 591 பேர் சென்றுள்ளதுடன் வீட்டு பராமரிப்பு உதவியாளர் பதவிக்காக 47 ஆயிரத்து 796 பேர் மாத்திரமே சென்றுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில் பார்க்கும்போது தொழில் நிமித்தம் கொழும்பு மாவட்டத்தில் இருந்தே அதிகமானவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். அதன் எண்ணிக்கை 22 ஆயிரத்து 801 ஆகும். கம்பஹா மாவட்டத்தில் இருந்து 20 ஆயிரத்து 957 பேரும் கண்டி மாவட்டத்தில் இருந்து 19 ஆயிரத்து 222 பேரும் குருணாகல் மாவட்டத்தில் இருந்து 17 ஆயிரத்து 777 பேரும் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 11 ஆயிரத்து 831 பேர் வெளிநாடு சென்றுள்ளனர். 2022ஆம் ஆண்டு 3 லட்சத்து 10 ஆயிரத்து 967 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் பணியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# எல்லை தாண்டும் மீன்பிடிப் படகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் சர்வதேச எல்லைகளை தாண்டி தொழிலில் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய பாதகங்கள் தொடர்பாக தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையின் கடல் எல்லைகளைத் தாண்டிச் சென்று சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகள் மனிதாபிமான நடவடிக்கையாக ஒரு வார காலத்தினுள் விடுவிக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

அகில இலங்கை ஆழ்கடல் மீன்பிடிப் படகு உரிமையாளர் சங்கத்துடன் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட ஆழ்கடல் மீன் பிடிப்படகுகள் கடற்றொழில் அமைச்சின் படகு கண்காணிப்பு பிரிவினரால் அவதானிக்கப்பட்டு வருவதுடன் அவ்வாறு எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்டமைக்காக 185 இற்கு மேற்பட்ட படகுகள் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் கலந்துரையாடப்பட்ட கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த சங்கத்தின் பிரதிநிதிகள், படகில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கருவி போதிய மின்சாரமின்மையால் செயலிழக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன எனவும் அது போன்ற சந்தர்ப்பங்களில் எல்லை தாண்டி மீன் பிடிக்க வேண்டிய நிலையேற்படுமெனவும் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், தற்போது தடுத்த வைக்கப்பட்டுள்ள படகுகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை செய்யும் படகின் படகோட்டிகளுக்கு கடற்றொழில் அமைச்சால் உரிய தண்டனை வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையிலுள்ள அனைத்து ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளும் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் வி.எம்.எஸ். கட்டமைப்பின் ஊடாக கண்காணிக்கப்படுவதாகவும் தவறு செய்யும் படகுகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படாவிட்டால் சர்வதேச அமைப்புக்களால் தடை விதிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகவும், எனவே எமது கடற்றொழிலைப் பாதுகாப்பதற்காக கண்டிப்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கவேண்டியிருப்பதாகவும் அதற்கு கடற்றொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது மிகவும் அவசியமெனவும் வலியுறுத்தினார்.

மேலும், சர்வதேச கடற்பரப்பில் தவறு செய்யும் ஒருசில படகுகள் காரணமாக எமது கடற்றொழில் முற்றாக அழிவடைவதற்கு இடமளிக்க முடியாதெனவும், நாட்டுக்கு பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும் இந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென சுட்டிக்காட்டியதுடன் எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்டு தடை விதிக்கப்பட்ட பல படகுகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் விரைவில் இந்த விடயம் தொடர்பாக பூரணமாக ஆராய்ந்து எஞ்சியுள்ள ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளையும் மனிதாபிமான ரீதியில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தொடர்ந்தும் இவ்வாறான தவறுகளைச் செய்தால் அவ்வாறு தவறு செய்யும் படகுகளுக்கு 06 மாதங்கள் தடை விதிப்பதற்கான சட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வரு கின்றன எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுதந்திர நாள் கறுப்பு தின வழக்கு ஜன. 8 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



சுதந்திரதினத்தை கறுப்பு நாளாக பிரகடனம் செய்து வடக்கிலிருந்து கிழக்கு வரை இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு திங்கட்கிழமை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பெப்ரவரி நான்காம் திகதி சுதந்திரதினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி கிழக்கு மாகாணம் வரை பேரணியாக சென்றது.

பேரணியில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈஸ்வரபாதம் சரவணபவன், சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் வேலன் சுவாமிகள் உட்பட ஏழு பேருக்கு எதிராக யாழ். பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு திங்கட்கிழமை மூன்றாவது தடவையாக விசாரணைக்கு வந்த போது எதிரிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா சட்டத்தரணிகளான மணிவண்ணன், பிருந்தா, பானுப்ரியன் ஆகியோர் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

வழக்கு அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அதனை கிடப்பில் போடுமாறு மீண்டும் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா மன்றுக்குத் தெரிவித்தார். இதன்போது வழக்கு தொடுநரான பொலிஸார் தாம் வழக்கு தொடுத்த எதிரிகள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வாக்குமூலம் தரவில்லை அவரின் வாக்குமூலத்தையும் பெற்றுக் கொண்ட பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை பெறவேண்டி உள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதிக்கு தவணையிட்டதுடன் எதிரிகள் மன்றில் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பித்தார். (05)

# சட்டவிரோத மின்சார மின் ஒழுக்கினால் தெல்லிப்பழை வீடொன்று எரிந்து நாசம்





அயல்வீட்டில்இருந்துசட்டவிரோத மான முறையில் மின்சாரத்தை பெற்று பாவித்து வந்த வீட்டாரின் வீட்டில் மின் ஒழுக்கு ஏற்பட்டு வீடு எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வசாவிளான் சுதந்திரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே திங்கட் கிழமை இரவு இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்தவீட்டுக்கு, மின்இணைப்பு வழங்கப்படாத நிலையில் , அந்த வீட்டில்வசித்து வந்த இளம் குடும்பம் ஒன்றுக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் குழந்தை பிறந்ததால், அயல் வீட்டார் உதவும் நோக்குடன் மின்சாரத்தை தமது வீட்டில் இருந்து வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் திங்கட்கிழமை யாரும் இல்லாத நேரத்தில் வீடு திடீரென தீப்பிடித்து எரிவதை அவதானித்த அயலவர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதிலும் வீட்டில் இருந்த பெறுமதி யான பொருள்களும், முக்கிய ஆவணங்களும் தீயில் எரிந்து நாச மாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## யாழ்ப்பாண மது விருந்தில் கைகலப்பு: கிளிநொச்சி இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மது விருந்தில் ஏற்பட்ட கைகலப்பில் தாக்குதலுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த இளைஞன் சிகிச்சை பயனின்றிஉயிரிழந்துள்ளார்.

இதன்போது கிளிநொச்சி உழவனூரை சேர்ந்த செல்வக்குமார் ஜெகதீஷ் குமார் (வயது 28) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 31ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பகுதியில் உறவினர் வீடொன்றில் நடைபெற்ற நிகழ்வுக்கு, கிளிநொச்சியில்இருந்துமூவர் வருகைதந்திருந்தநிலையில், குறித்த நிகழ்வை தொடர்ந்து இடம்பெற்ற மது விருந்தில் கலந்து கொண்டனர்.

அதன்போது எழுதுமட்டுவாழ் பகுதியை சேர்ந்தவர்களுக்கும் கிளிநொச்சியில் இருந்து வருகை தந்தவர்களுக்கும் இடையில் போதையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைக்கலப்பாக மாறியுள்ளது.

அதன்போது, ஜெகதீஸ்குமாரை கட்டிவைத்தும் தாக்கியுள்ளனர். பின்னர் அங்கிருந்தவர்கள்அவர்களை சமரசப்படுத்தி அவ்விடத்தில் இருந்துஅனுப்பிவைத்தனர்.

அந்நிலையில் திடீர் உடல்நலக்குறைபாடுஏற்பட்டு , யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளநிலையில், இருவரை கைது செய்-துள்ளனர். (05)

## தேசிய வைத்தியசாலையில் பெட் ஸ்கேன் சோதனை நிபுணரின்மையால் நிறுத்தம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் 'பெட் ஸ்கேன்' (பி.ஈ.ரி) பரிசோதனைகள் இன்னும் இரண்டு வாரங்களின் பின்னர் இடை நிறுத்தப்படும் என அரசாங்க மரபியல்விஞ்ஞான தொழில் நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர்சானகதர்மவிக்கிரம தெரிவித்தார்.

இந்த இயந்திரங்களைக் கொண்டு பரிசோதனை செய்யும் நிபுணர்கள் ஓய்வு பெறுவதும், நாட்டை விட்டு வெளியேறுவதுமே இந்த நிலைமைக்குக் காரணம்.

இதேவேளை, கண்டி தேசிய வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சைஅளிக்கும்'லினிட்டர் எக்ஸிலரேட்டர்'இயந்திரங்கள் செயலிழந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (05)

## கிழக்கு உள்ளூராட்சி மன்ற ஊழியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் பேச்சு

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் சுமார் எட்டு வருடங்களுக்கு மேலாக தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்கள் தங்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்பை சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

அதன்போதுஅவர்களின் கோரிக்கையினை உரிய அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசெல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருந்தார்.

அதற்கமைய நேற்று (செவ்வாய்க்கிழமை) உள்-ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்தவை சந்தித்து கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் நீண்ட காலமாக தற்காலிக மற்றும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமையாற்றுபவர்களை நிரந்தரமாக்குவது சம்பந்தமாக கலந்துரையாடினார்.

இவ்விடயம் சம்பந்தமாக அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஆராய்ந்து பதிலளிப்பதாக இராஜாங்க அமைச்சர் கூறினார். (05)



## சனல் 4 இல் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் ஆராய்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு?

சனல் 4 இன் புதிய வீடியோவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக அமைச்சர் மனுசநாணயக்கார தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சனல் 4 தெரிவித்துள்ள விடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச சமூகத்தின் ஆதரவு கோரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சனல் 4 வீடியோ வெளியான தருணம் குறித்து கேள்வி எழுப்பியுள்ள மனுஷ நாணயக்கார அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் அனைத்து குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவைஅமர்விற்கு முன்னதாக வீடியோக்கள் ஆவணங்களைஅமைப்புகள் வெளியிடுவது வழமை எனவும் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (05)

## தொலைபேசியை கொள்வனவு செய்வது போன்று நடித்து அதனை அபகரித்துச் சென்ற யுவதி கம்பஹாவில் கைது

அப்பிள் ரக கையடக்கத் தொலைபேசியை கொள்வனவு செய்வதாக வந்த யுவதி ஒருவர் அதனை செயற்படுத்தி பார்ப்பது போல் பாசாங்கு செய்து, அதனுடன் தப்பிச் சென்ற நிலையில் கம்பஹா குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் உடுகம்பளை பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய யுவதி ஒருவராவார்.

இவர் வெளிநாடு செல்லும் நபர்களுக்கு விழிப்புணர்வு விரிவுரைகளை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேஸ்புக்கில் வெளியான விளம்பரத்தின் அடிப்படையிலேயே குறித்த தொலைபேசியை கொள்வனவு செய்பவர் போன்று இவர் வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த தொலைபேசி சுமார் ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியானது எனவும் அதனை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்எனவும்பொலிஸார் தெரிவித்தனர். (05)

## மாடு மேய்க்கச் சென்ற நபர் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமடியாமடு பிரதேசத்தில் மாட்டுப்பட்டி பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற ஆண் ஒருவர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, கிண்ணியடி விஷ்ணு கோவில் வீதியைச் சேர்ந்த 49 வய-துடைய கந்தையா மாமாங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் திங்கட்கிழமை மாடுகளை மேய்ப்பதற்காக வழமை போல ஓமடியாமடு பகுதியில் அமைந்துள்ள மாட்டுப்பட்டிக்கு வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

எனினும், அவர் நேற்று காலை வரை வீடு திரும்பாத நிலையில், மாட்டுப்பட்டியின் உரிமையாளர், அப்பகுதிக்குச் சென்று அந்த நபரை தேடியுள்ளார். அவ்வேளை மாட்டுப்பட்டிக்கு அருகிலுள்ள பகுதியில் அவர் உயிரிழந்து சடலமாக கிடப்பதை பார்த்துவிட்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அதன் பின்னர், பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவு பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுவந்துள்ளனர்.

அத்தோடு, சடலத்தைபிரேதபரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவை பெற்று, வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

## மசாஜ் நிலையத்தில் பணி புரிந்தவர் திடீர் சுகவீனமடைந்து உயிரிழப்பு

*நீர்கொழும்பில் உள்ள மசாஜ் நிலையமொன்றில் பணிபுரிந்து வந்த நபர் ஒருவர் திடீரென சுகவீனமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என நீர்கொழும்பு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*குறித்த நபர் திங்கட்கிழமை இரவு மசாஜ் செய்யும்போது சுகவீனமடைந்து அவசர அம்பியூலன்ஸ் மூலம் நள்ளிரவு 12 மணியளவில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.*

*இருப்பினும், அவர் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.*

*இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.*

*(05)*

## செல்வம் மற்றும் சார்ள்ஸ் எம்.பிக்களுக்கு பிடியாணை

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற கரிநாள் பேரணியில் கலந்து கொண்டு, அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாண பொலி-ஸாரால் யாழ். நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டநிலையில்வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் திங்கட்கிழமை வழக்கு நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது, மன்றில் சமுகமளிக்காத செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ்நிர்மலநாதன்மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு மன்று பிடியாணை பிறப்பித்தது. (05)

## 12 எரிவாயு சிலிண்டர்களை திருடிய நபர் கைது 9 சிலிண்டர்கள் மீட்பு; காத்தான்குடியில் சம்பவம்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட லிற்ரோ எரிவாயு சிலிண்டர் விற்பனை முகவர் நிலையத்தில்வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்களை சூட்சுமமான முறையில் திருடிய சந்தேக நபர் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

எரிவாயு முகவர் நிலையத்தின் பின்புற மதிலின் மேல் ஏறி, குறித்த சந்தேக நபர் 12 எரிவாயு சிலிண்டர்களை திருடியுள்ளார்.

திருடிய கொள்கலன்களை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்தபோதே அவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இதனையடுத்து, சந்தேக நபரிடமிருந்து 9 சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3 சிலிண்டர்களையும் அவர் விற்பனை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதான நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனக் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



## கணித – விஞ்ஞானப் பிரிவில் வவுனியாவில் உக்குளாங்குளம் கிராம மாணவர் சாதனை

வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை பெறுபேற்றில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற உக்குளாங்குளம் கிராம மாணவர்கள் இருவர் கணித- விஞ்ஞான பிரிவில் முதலாம் மற்றும் 15 ஆம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் கல்வி பயின்ற உக்குளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விமல்ராஜ் விதுவர்சன் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன், உக்குளாங்குளம்பகுதியைசேர்ந்தஅரசரட்ணம் திசோராஜ் என்ற வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் கணிதபிரிவில் 2ஏ பீ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 15 ஆவது பெற்று உக்குளாங்குளம் மண்ணுக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். (05)

# பேராசிரியர்களின் வரிப் பிரச்சினை வருமான வரி அதிகாரிகள் கைகளில்

## கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் தகவல்

பல்கலைக்கழகப்பேராசிரியர்களின்வரிப்பிரச்சினையை தீர்ப்பதற்காகசட்டமாஅதிபரின் நிலைப்பாட்டைவருமானவரி திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாககல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநிலையியற்கட்டளை 27-2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பதிலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக பேராசிரியர்களின் வரிப் பிரச்சினையை தீர்ப்பதற்காகச் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை வருமானவரி திணைக்களத்துக்கு அனுப்பி இருக்கிறோம். அவர்கள் அது குறித்த அறிக்கையை தயாரித்து திறைசேரிக்கு அனுப்பி பொருத்தமான நடவடிக்கைஎடுப்பார்கள்என எதிர்பார்க்கிறோம் .

இப்பிரச்சினை தொடர்பாக எமது தரப்பு மேற்கொள்ளவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. அத்துடன் கல்விக் கொடுப்பனவு, மதிப்பீட்டுக் கொடுப்பனவு அனைத்தையும் சேர்த்தால் தொழில் வல்லுனர்கள் அனைவரும் நூற்றுக்கு 36 வீதம் என்ற வரி அறிவிடும் தொகுதிக்கே உள்வாங்கப்பட்டிருக்கிறனர்.

அதன் பிரகாரமே இந்த வரி அறவிடப்பட்டது. இந்த வரி அறவிடும் தொகுதிக்கே அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்வாங்கப்பட்டி ருக்கின்றனர்.

மேலும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் சில பிரச்சினைகளை நாங்கள் தீர்த்துக்கொண்டோம். சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிலைப்பாட்டின் பிரகாரம் தற்போது நாங்கள் வருமானவரிதிணைக்களத்துக்கு அதனை அனுப்பி இருக்கிறோம். தேசிய வருமான வரித் திணைக்க ளம் அதனை நிதி அமைச்சுக்கு அனுப்பி அதுதொடர்பான பரிந்துரைகளைப்பெற்றுக் கொள்ளவேண்டும் - என்றார்.



# கங்கைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்வு; அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தல்!

களு, கிங், நில்வளா கங்கைகள்மற்றும்அத்தனகலஓயாஆகியவற்றின்நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன் பொறியியாலாளர் எஸ். பி. சி. சுகீஸ்வர கூறுகையில் -

இவற்றின்தாழ்வானபகுதிகளில்நீர்மட்டம்இன்னும்அதிகமாகவே காணப்படுவதாகத் தெரிவித்தார். திங்;கட்கிழமை எந்தப்பிரதேசத்திலும்கணிசமானமழைவீழ்ச்சிபதிவாகவில்லையென்றாலும், அந்த ஆறுகளின் நீர்மட்டம் கணிசமானஅளவுஉயரும்எனஎதிர்பார்க்கப்படுவதால் மக்களை அவதானமாகஇருக்குமாறும் அவர் அறிவுறுத்துகிறார்.(05)

# பிள்ளையானைச் சாடுகிறார் இரா. சாணக்கியன் எம்.பி.

சனல் 4 தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள்முடிவடையும் வரை பிள்ளையானையும் சுரேஸ் சாலேயையும் அவர்களின்பதவிகளில்இருந்து இடைநிறுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

ருவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் நான்காவது வருட நிறைவின் போது நான் இது குறித்து தெரிவித்திருந்தேன். ஆனால் இலங்கை அரசாங்கம் இதனைக்கவனத்தில்கொள்ளவில்லை.

தற்போது இந்த விடயம் அம்பலமாகியுள்ளது. விசாரணைகள் முடிவடையும் வரை பிள்ளையானையும் சுரேஸ் சாலேயையும் பதவிகளில் இருந்து இடைநிறுத்தும் நடவடிக்கைகளையாவது அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# அத்துருகிரிய ஜெரோம் உள்ளிட்ட 3 பேர் கைது

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் அத்துருகிரிய ஜெரோம் உள்ளிட்ட 3 பேர் வெலிக்கடைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பகுதியில், ரி - 56 ரகத் துப்பாக்கியுடன் சிலர் நடமாடுகின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பயணித்த கார் ஒன்றும் கையகப்படுத்தப்பட்டது.

கைதானவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# துப்பாக்கியோடு பிடிபட்ட சிப்பாய்க்கு விளக்கமறியல்

(ந.லோகதயாளன்.)

இயக்கச்சி இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கியை களவாடிச் சென்ற நிலையில் கைதுசெய்யப்பட்ட குருநாகலைச் சேர்ந்த இராணுவச் சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராணுவ முகாமிலிருந்து இரகசியமாக துப்பாக்கியை எடுத்துச் சென்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குருநாகல் பகுதியை சேர்ந்த26வயதானஇராணுவச்சிப்பாய்ஒருவர் அறிவியல் நகர் தொடரூந்து நிலையத்தில் வைத்து இராணுவப் புலனாய்வாளார்களால் கைது செய்யப்பட்டு இராணுவப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இயக்கச்சியில. உள்ள கவசப்படை பிரிவைச் சேர்ந்த இராணுவச்சிப்பாய் நேற்றுமுதினம் விடுமுறையில் வீடு சென்ற போது, அவரது கடமை துப்பாக்கியை ஒப்படைக்காது வெளியேறியிருந்தார்.

இதுகுறித்துஆய்வுசெய்தஇராணுவத்தினர், சிப்பாய்துப்பாக்கியுடன்வெளியேறியிருக்கலாம் எனசந்தேகித்துஉடனடியாகபளைதொடரூந்து நிலையத்திற்கு சென்றபோதும் விடுமுறையில் சென்ற சிப்பாய் அங்கிருக்கவில்லை.

இதன்போது சிப்பாய் பளையில் இருந்து தொடரூந்தில் ஏறினால் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதனை ஊகித்து கொடிகாமம் சென்று தொடரூந்தில ஏறியுள்ளார்.

இதேநேரம் இயக்கச்சி இராணுவத்தினர் கொடிகாமத்துக்கு தேடி சென்ற போதும் கொடிகாமத்திலிருந்து தொடரூந்து புறப்பட்டிருந்தது. இதையடுத்து, பளை தொடரூந்து நிலையத்திலிருந்து சிவில் உடையில் இராணுவ அணியொன்று தொடரூந்தில் ஏறி தேடுதல் மேற்கொண்ட நிலையில்கிளிநொச்சிஅறிவியல்நகர்பகுதியில் தொடரூந்து பயணித்துக்கொண்டிருந்தபோது, இராணுவச்சிப்பாயை அவர்கள் அடையாளம் கண்டனர்.

இதையடுத்து, இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு, மாங்குளம் தொடரூந்து நிலையத்தில் வைத்து, சிப்பாய் தொடரூந்தில் இருந்து இறக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் களவாடிச் சென்ற ரி56 ரக டாஸ்-02 ரகத் துப்பாக்கி அவரது பயணப்பையிலிருந்து மீட்கப்பட்டதோடுஅதற்கான4ரவைக்கூடுகளும் ரவையுடன் மீட்கப்பட்டன.

மாங்குளம் தொடரூந்து நிலையத்தில் வைத்து, இராணுவப்பொலிசார் அவரிடம் நடத்திய முதற்கட்ட விசாரணையில், குடும்பத் தகராறின் எதிரொலியாக மனைவியின் கள்ள உறவில இருப்பரை கொல்லும் நோக்கில் துப்பாக்கியை கொண்டு சென்றதாக தெரிவித்துள்ளார்.

இராணுவச்சிப்பாயின் மனைவி, தற்போது அவரை விட்டு பிரிந்து சென்று, கள்ளக்காதலனுடன் வாழ்ந்து வருகிறார்.

கள்ளக்காதலன் தன்னை தொடர்ந்து, மிரட்டி வருவதாகவும், இதனால் பழிவாங்குவதற்காகவே துப்பாக்கியை எடுத்துச்சென்றதாகவும் இராணுவச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் நேற்று முன்தினம் கிளிநொச்சி,நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபொழுது சந்தேகநபரை எதிர்வரும் 13ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஏப்ரல்.....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

2018ஆம்ஆண்டுஇடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன அமோக வெற்றிக் பெற்றது.ஏப்ரல் குண்டுத் தாக்குதலுக்குமுன்னார்ராஜபக்ஷக்கள் மக்களாணையை பெற்றுக்கொண்டார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்துப் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அப்போதைய ஆட்சியில் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.சர்வதேச நிறுவனங்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன. மக்களாணையை வெல்ல குண்டுத்தாக்குதலை நடத்த வேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு இல்லை.

சனல்- 4 குறுகிய அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது.எதிர்வரும் காலங்களில்இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவரை தோற்றுவிக்க 9 முஸ்லிம் அடிப்படைவாதிகள் தற்கொலை குண்டுத்தாரிகளாக மாறுவார்களா ?

கோட்டபய ராஜபக்ஷ இரண்டு வருடகாலம் ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். பல்வேறு காரணிகளால் அவர் பதவி விலகினார். கோட்டபய ராஜபக் ஷவைப் பதவி விலக்கச் செயற்பட்டவர்கள் தாம் இறக்கும் தருணத்தில் அதற்காக வேதனையடைவார்கள். நாட்டை ஆட்சி செய்த அரச தலைவர்களில் ஊழலற்ற அரச தலைவராகவே கோட்டபாய ராஜபக் ஷ செயற்பட்டார்.

பொருளாதாரப்பாதிப்புக்கு மத்தியில் அடிப்படைவாதிகள் அனைவரும்ஒன்றிணைந்து அவரைப் பதவி விலக்கினார்கள். பொய்யான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து முன்வைத்தால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

## அசாத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் தொடக்கத்திலேயே தெரிவித்து வந்திருந்தோம் அத்தாக்குதல், அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான சதித்திட்டம் என்பதை நாம் தொடர்ச்சியாக கூறிக் வந்தோம். அப்போது அது அரசியல் ரீதியான பரப்புரை என்று நமது வாய்களை மூடுவதற்குமுயற்சித்தார்கள். அசாத் மௌலானாவிடம் சுரேஷ் சாலே முக்கியமான விடயங்களைக் கோரியிருக்கிறார்.

குறிப்பாக எனக்கோ, ஹரின் பெர்ணான்டோவுக்கோ, மனுசவுக்கோ உடன் ஏதாவது தகவல்கள் கூறுனீர்களா என்று அவர் கோரியிருக்கிறார். இந்த விடயங்கள் குறிப்பில் உள்ளன. அந்த குறிப்பில் எனது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சுரேஷ்சாலேதொடர்பில் நான் ஒரு விடயத்தை தொடர்ந்து கூறியதால் எனது பெயர்உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னதாக நான் ஒரு விடயத்தினைவெளிப்படுத்தியால் எனக்கு மானநஷ்ட கோரிக்கை விடுத்து நோட்டிஸ் ஒன்றையும் சுரேஷ் சாலோ அனுப்பியிருந்தார்.

தற்பொழுது காணொளி வெளிப்பட்டநிலையில், அசாத் மௌலானாவை நாட்டுக்கு அழைத்து வந்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் பிள்ளையானை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். சுரேஷ் சாலேயை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்.

அதனை விடுத்து சனல்-4 காணொளியையும் அந்த நிறுவனத்தினையும் விமர்சித்துக் கொண்டிருப்பதால் எவ்விதமான பயனும் இல்லை உண்மைகள் கண்டறியப்படப் போவதில்லை. விசேடமாக சுரேஷ் சாலேயின் அச்சுறுத்தல் காரணமாகவே அசாத் மௌலானா 2020-2021 காலப்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறி இருக்கிறார். அக்காலத்தில் அசாத் மௌலானாவிடத்தில் தாக்குதல் பற்றிய தகவல்களை, எனக்கோ, பேராயருக்கோ, ஹரீனுக்கோ கூறினீர்களா என்று தொடர்ச்சியாக சுரேஷ் சாலே கேள்விகளை எழுப்பி உள்ளார்.

தற்போது மஹிந்த ராஜபக் ஷவின் தயவில் ஆட்சியைப் பெற்றுடுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த விடயத்தை விசாரணைக்கு உட்படுத்த முடியும்என்கின்றநம்பிக்கை எமக்கு இல்லை.

தற்போது ரணில் விக்கிரமசிங்க ராஜபக் ஷகளின் பெரமுனவின் உறுப்பினர்களுடையதாளத்தில்தான் ஆடுகின்றார். அவர்களின் தயவில்தான் அவருடைய அதிகாரம் உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் இருப்புதாமரை மொட்டுவால்தான் தீர்மானிக்கப்படுகிறது என்பது முழு நாடும்அறிந்தவொருவிடயம்.

அதேநேரத்தில் மௌலானா வெளிப்படுத்துகின்ற தகவல்கள் எனக்கும் ஹரீனுக்கும் மனுஷவுக்கும்அக்காலத்தில் கிடைத்திருந்தன. அதன் காரணமாகவே நாம் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றவிடயத்தில் உறுதியாக நின்றோம். ராஜபக் ஷக்கள் அரசியல்நலனுக்கான இந்த விடயத்தை பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை தொடர்ச்சியாகக் கூறினோம்.

துரதிஷ்டவசமாக ஹரினும், மனுஷவும் ஆளும் தரப்புப்பக்கத்தில் இப்பொழுது உள்ளார்கள் அவர்கள் ராஜபக்ஷ முகாமைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள் என்ற கவலை நமக்கு உள்ளது. அதேநேரத்தில் ஹரினும், மனுஷவும்நீதியை பெறுவதற்கு ஜனாதிபதிக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும். அதற்குரிய வல்லமை அவர்களுக்கு இருக்க வேண்டும் என்று நான் என் நண்பர்களிடத்தில் வலியுறுத்துகின்றேன் - என்றார்.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பூர் அனல் மின்நிலையத்தை உருவாக்குவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பல்வேறு காரணிகளினால் சம்பூர் அனல்மின்நிலைய பணிகள் முன்னெடுக்கப்படவில்லை.


நாட்டில் இரண்டு அனல் மின்நிலையங்கள் தேவையா? என மின்சார சபை தொழிற்சங்கத்தினர் கேள்வி எழுப்பியுள்ளார்கள். ஆகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சூரிய சக்தி மின்னுற்பத்தி திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மின்சார சபையை நிச்சயம் மறுசீரமைக்க வேண்டும். மறுசீரமைப்பதற்கானசட்டமூலம்தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.

அதைத்தொடர்ந்துஅடுத்த மாதம்நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும். மின்சார சபையின் 24 ஆயிரம் ஊழியர்கள் கட்டமைப்பை நிச்சயம் முகாமைத்துவம் செய்ய வேண்டும் - என்றார்.




# சாதாரண பெரும்பான்மை போதுமானது



உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்ட மூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியுமென உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற சபாநாயகர்அறிவிப்பின்போது மேற்கண்ட விடயத்தினை அவர் அறிவித்தார்.

அவ்வறிவித்தலில், ஆட்சியாளர்களினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளரான சதுரங்க அபேசிங்க உள்ளிட்ட இருவரால்தாக்கல்செய்யப்பட்டமனு மீதான விசாரணை கடந்த ஒகஸ்ட் 28 முடிவடைந்ததை அடுத்து இது தொடர்பான தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

இவ்வாறான நிலையிலேயே உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும்எனஉயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது - என்றார்.

# ஜெனிவா பறந்தார் சுமந்திரன் எம்.பி.

(ந.லோகதயாளன்.)

ஐ. நா. மனித உரிமை பேரவை கூட்டத்தொடருக்கு முன்னதாக நடைபெறும் நாடுகளுடனான சந்திப்பில் கலந்துகொள்ளும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஜெனிவா பயணமாகியுள்ளார்.

ஐ.நா.மனித உரிமை அமர்வு இடம்பெறுவதற்கு முன்னரான நாடுகளிற்கு இடையேயானசந்திப்புஇன்று இடம்பெறுகின்றது அதில் கலந்துகொள்வதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுக் காலை பயணமானார்.

இந்த ஜெனிவாவிற்கான பயணத்தை பிரித்தானியா ஏறபாடு செய்து வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினருடன்ஆம்நெஸ்ரி சிறிலங்கா அமைப்பின் பிரதிநிதி ஒருவரும் பயணித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2023இல் வெளியிடப்பெற்றது.